முருகப்பெருமான் துணை

**மகான் கண்ணப்ப நாயனார் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

13.02.2023, திங்கட்கிழமை

1. தன்னலமிலா மக்கள் சமூகம்
தரணியெங்கிலும் படைத்தருள
அண்ணலாக வந்த அரங்கனே
அகிலமதில் உன் பெருமை கூறி
2. கூறியே சுபகிருது சால் திங்கள்
குறைவிலா முதல் திகதி சோமவாரம்
(சுபகிருது வருடம் மாசி மாதம் முதல் நாள் 13.02.2023, திங்கட்கிழமை)
தெரிவிப்பேன் அனுகூல ஆசி
தேசிகனுக்கு கண்ணப்ப நாயனார் யானும்
3. யானும் உலகோர் பண்புற வேண்டி
உயர் ஞானி அரங்கன் வேதம்
ஞானம் வலிமைதனை உரைப்பேன்
நல்லறம் சூழ மனிதன் வாழ
4. வாழ பிற உயிர் நேசித்து
வழிகாட்டும் தயவு நெறியாம்
ஞாலமதில் ஜீவகாருண்யம் அருளும்
ஞானமே கடைத்தேற்ற வல்லதாகும்
5. ஆகவே சுத்த சைவ நெறியை
ஆதரித்து அனைவரும் ஏற்று
வகையான அன்னதானமெனும்
வள்ளல் நெறிதனையும் ஏற்று
6. ஏற்றுமே மாதருமம் துவக்கி
எங்கும் அரங்கன் பேரிலே
ஆற்றல்பட கிளைகள் தனை
அளவிலா பெருக்கி அன்னதானம்
7. தானமதை தொடர்ந்து செய்திட
தருமபலமும் கூடி இனிதே
ஞானமாக மாற்றம் காணும்
ஞானிகளே தேடிவந்து அருளும்படி
8. அருளும்படி ஆசிகளாகக் கிட்டிட
அனுதினம் மகான்கள் பேரில்
அருள்பெற நாமசெபமே நாளும்
ஆற்றல்தரும் மந்திரமாக உருஏற்ற
9. ஏற்றவே இந்தவித வழிமுறை
எல்லா மக்களும் வேதமாக
ஏற்றுவர அரங்க ஞானிமூலம்
எல்லா வரமும் இனிதேகிட்டி

10. கிட்டியே பிறவிப் பயன்தனை
குறைவிலா அடைந்து தேறுவர்
இட்டம் போல் மேல்நிலை கண்டு
இவ்வுலகையே மாற்றும் ஞானிகளாக

11. ஆகவே அரங்கன்வழி வழி
அகிலத்தில் நவகோடி மேலான
மிகைபட ஞானிகள் உருவாகி
மண்ணுலகில் மாற்றம் தருவர்
அனுகூல ஆசி முற்றே

—சுபம்—